**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.**

2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 08-ம் நாள் புதன்கிழமை

**IA NO.01/2024**

**In**

**O.S No.136/2018**

1) சின்னப்பா,

2) ராஜாக்கண்ணு, **....மனுதாரர்/1,3 பிரதிவாதிகள்**

**//எதிர்//**

ஜீவானந்தம் **.....2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி**

முத்துவேலு **....எதிர்மனுதாரர்/வாதி**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/1,3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராஜசேகர்.,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ப.சிங்கரேவேலு.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்/1,3 பிரதிவாதிகள் தரப்பில் கட்டளை 09 விதி 07-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவில் எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர்கள் பேரில் உரிமைவிளம்பல் மற்றும் நிரந்தர தடையாணை பரிகாரத்திற்கு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சியாடி

வருகிறார்கள். இந்நிலையில் இந்த வழக்கும் எதிர்மனுதாரர்/வாதியை குறுக்குவிசாரணை செய்ய வாய்தா போடப்பட்டு உள்ளது. மனுதாரர் தனக்காகவும் 1-ம் எதிர்மனுதார்/பிரதிவாதிக்காகவும் இந்த வழக்கை நடத்தி வருகிறார். இந்த வழக்கும் கடந்த 24.06.2024-ம் தேதியில் விசாரணக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அன்றைய தினம் வெளியூர் சென்றுவிட்டதால் மனுதாரரால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை. அதனால் மனுதாரர்கள் பெயரில் ஒருதலைப்பட்சமாக உத்தரவு ஏற்பட்டுவிட்டது. மனுதாரர்கள் வேண்டுமென்றோ, அலட்சியம் காரணமாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகாது இருக்கவில்லை. இந்த வழக்கில் அவர்களுக்கு நல்ல கட்சி உள்ளது. எனவே கடந்த 24.06.2024 தேதியில் எங்கள் பேரில் ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டியதாக உள்ளது என கண்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :-

மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை சில மாதங்கள் விட்டுவிட்டார். மேலும் மேற்படி நம்பர் வழக்கு கடந்த 24.06.2024 அன்று வழக்கு பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டுள்ளது. விபரமும் மனுதாரர் பிரதிவாதிகளுக்கு இந்த நன்கு தெரிந்துக்கொண்டே மனுதாரர் தனது மனுவில் மேற்படி விபரம் தற்போது தான் தெரியவந்தது என்று கூறுவதும் மனுதாரர்/ 1-ம் பிரதிவாதி வெளியூர் சென்றுவிட்டதாக மனுவில் கூறுவதும் முற்றிலும் அப்பட்டமான பொய்யாகும். மனுதாரர்/ 2-ம் பிரதிவாதி நீதிமன்றதில் ஆஜராகாமைக்கு காரணம் மனுதாரர் தனது மனுவுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கில் மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக எக்ஸ்பார்ட்டி உத்தரவு ஏற்பட்டு பல மாத காலத்திற்கு பிறகு மனுதாரர் மேற்படி மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. மேலும் மனுதாரர் தனது மனுவில் கூறும் காரணங்கள் முற்றிலும் நியாயத்திற்கு புறம்பானதாகும். மேற்குறிபிட்ட காரணங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. மனுதாரர் வழக்கை தாமதம் செய்ய வேண்டும் என்பதற்காகவும், எதிர்மனுதாரரை அலக்களைவு செய்ய வேண்டும் என்கிற கெட்ட எண்ணத்துடனும் மனுதாரர் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கூறும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்க தக்கதல்ல மனுதாரர் தூய்மையான கரங்களுடன் நீதிமன்றத்திற்கு வரவில்லை, மனுதாரரின் மனு தற்போதுள்ள நிலையில் ஏற்கத்தக்கதல்ல. எனவே மனுதாரரின் இந்த மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது 1,3 பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 24.06.2024 ம் தேதியில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தனது மனுவில் மனுதாரர் அன்றையதினம் வெளியூர் சென்றுவிட்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிரெவரில்லா உத்தரவு ஏற்பட்டு பல மாதங்களுக்கு பிறகு தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்கத்தக்கதல்ல என்று கட்சி செய்யப்பட்டுள்ளது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 09 விதி 07 ன் கீழான மனுவை பொறுத்த வரை அதற்கு காலவரையறை இல்லை மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 07 விதி 09 ன் கீழான மனுக்களை இலகுவான நோக்குடன் பரிசீலிக்க வேண்டுமென்று பல முன்தீர்ப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மனுதாரரால் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இருப்பினும் மனுதாரரால் ஏற்பட்ட காலதாமதத்தினை ஈடு செய்யும் வகையிலும் ஏற்கனவே கடந்த 24.06.2024-ம் தேதியன்று மனுதாரர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட செலவுத்தொகையை செலுத்தி வைத்தார் என்பதை கவனத்தில் கொண்டும் இம்மனு ரூ.1,000/- செலவுத்தொகையுடன் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு ரூ.1,000/- செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 08-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

//உண்மை நகல்//

ஒம்/V.சிவகாமசுந்தரி
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அறந்தாங்கி.

வரைவு/செவ்வை உத்தரவு
I.A.No. 01/2024
O.S.No. 136/2018
நாள். 08.01.2025
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அறந்தாங்கி.